# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | : CC. 395/2009 | Taluk | : சிவகங்கை |
| Deposition of Witness for | : PW 2 | Caste | : |
| Name | : ஜெகதீசன் | Calling | : |
| Father / Husband Name | : பாண்டியராஜ் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 25th March 2025.

---

**(எதிரி ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை:-**

நான் தற்சமயம் புழுதிப்பட்டியில் போர் மேனாக வேலை செய்து வருகிறேன். காரைக்குடி துணை மின்நிலையத்தில் கம்பியாளராக பணிபுரிந்த சமயம் காரைக்குடி உட்கோட்டம் 230 KV காரைக்குடி - காவனூர் மின்பாதையில் மின்கோபுரங்கள் உள்ள மின்பாதையில் மாதம் ஒருமுறை நாங்கள் சென்று பார்வையிட்டு அறிக்கை கொடுப்போம். அதுபோல் கடந்த 20.04.2009 ம் தேதியன்று நானும் கண்ணன் என்பவரும் மேற்படி 230 KV மின்வெளிப்பாதையில் புரசடைஉடைப்பு, காயாஓடை ஆகிய பகுதியில் பார்வையிடச் சென்றபோது மின்கோபுரங்களில் இருந்த ஆங்கிள்கள் மொத்தம் 57 காணவில்லை அதனை ஒவ்வொன்றாக குறிப்பிட்டு தற்சமயம் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி மின்வாரியத்திற்கு சொந்தமான பொருள்கள் காணாமல் போனதால் யாரோ திருடிச் சென்றது குறித்து நானும் கண்ணன் என்பவரும் காரைக்குடி மின்வாரிய

Web copy

அலுவலகத்தில் உதவி மின் பொறியாளரிடம் வந்து விவரத்தைச் சொன்னோம். அவர் வந்து பார்வையிட்டு காளையார்கோவில் காவல் நிலையத்தில் எழுத்துப் பூர்வமாக புகார் மனு கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>**

மேற்படி 20.04.2009ம் தேதிக்கு முன்பாக மேற்படி மின்வழித் தடத்தில் ஆங்கிள்கள் காணாமல் போனதாக ஏற்கனவே 2 முறை காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. 57 ஆங்கிள்களில் எந்தெந்த கோபுரத்தில் எத்தனை ஆங்கிள்கள் காணவில்லை என என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். மின்கோபுரத்தில் பல இடங்களில் ஆங்கிள்கள் போடப்பட்டிருந்ததில் எந்த இடத்தில் உள்ள ஆங்கிள்கள் காணவில்லை என புகாரில் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் நான் புகார் கொடுக்கச் செல்லவில்லை. நான் காணாமல் போனதாக சொல்லும் மொத்தம் 57 ஆங்கிள்களை 1, 2 ஆள்கள் தூக்கிச் செல்ல முடியாது என்றால் மொத்தமாக தூக்கிச் செல்ல முடியாது. கோபுரங்கள் இருந்த இடங்கள் வயல் வெளிப்பகுதிகளிலும் காட்டுப்பகுதியிலும் உள்ளது. அங்கு ஆள்கள் நடமாட்டம் இருக்குமா என்றால் சில நேரங்களில் சில இடங்களில் இருப்பார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம்**, B.Sc., B.L., 25.03.2025,
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web copy